1993 மார்ச் 30]

தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஏற்படுத்த உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்த ஆணையத்தின்முன் அவர்கள் அங்கு சென்று, நிலைமைகளை விளக்கி, அதன்பின் அந்த ஆணையம் அளிக்கும் பரிந்துரையின்பேரிலே அரசு முடிவு செய்யும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 180, திரு. ம. தனபால், மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர்.

180—

திருப்போரூர் தொகுதியில் முந்திரித் தொழிற்சாலை அமைத்தல்.

*10434—திரு. ம. தனபால் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதியில் முந்திரித் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருப்போரூர் தொகுதியில் முந்திரி தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தன்னிகரில்லாத் தலைவி எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இந்த தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்திலே நிறைய தொழிற்சாலைகளை உருவாக்கி, இன்றைக்கு எவ்வளவோ ஏழைகள் மற்றும் வாடிக்கொண்டிருந்த வர்க்கத்தை எல்லாம் முன்னேற்ற அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து ஒரு சாதனை படைத்துக் கொண்டிருக்கிற இந்த ஆட்சியில் என்னுடைய தொகுதியிலே இருக்கிற திருப்போரூர் பகுதியில் கிட்டத்தட்ட ஆயிரம் ஏக்கரா நிலப்பரப்பில், முந்திரித் தோப்புகள் காணப்படுகின்றன. அதுமட்டுமல்ல நிறைய மகசூல் இருக்கிறது. இந்தப் பகுதியிலே ஒரு தொழிற்சாலையை உருவாக்கினால் ஒருபுறத்திலே பார்க்கிறபோது, இந்த அரசுக்கு நிறைய லாபம் இருக்கும்;

[1993 மார்ச் 30

அதேபோன்று, நிறைய தொழிலாளர்களை உருவாக்குகிற வகையில் வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்பதனால், இது மீண்டும் பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் சுமார் 10.402.47 ஏக்கர் நிலப்பரப்பில் 100 தோட்டங்களில் முந்திரி பயிரிடப்படுகிறது. ஒரு வருடத்தின் சராசரி விளைச்சல் 63 ஆயிரம் கிலோகிராம் மட்டுமே இருப்பதால், அந்த முந்திரி பருப்பினைச் சேகரித்து, விற்பனை செய்வதற்கு, பொது ஏலம் மூலம் விடப்படுகிறது. எனவே, அதிக அளவில், ஏலம் எடுப்போர் முந்திரியைச் சேகரித்துக் கொள்கிறார்கள். திருப்போரூரைச் சேர்ந்த கேளம்பாக்கம் வனச் சரகத்தில் மொத்தம் 26 முந்திரித் தோப்புகள் உள்ளன. அவற்றை ஒப்பந்தக்காரர்கள் குத்தகைக்கு எடுத்து சேகரித்து வருகிறார்கள். எனவே, இப்படிச் சேகரித்து வரக்கூடிய முந்திரிகள், கன்னியாகுமரிக்கு அனுப்பப்பட்டு விடுவதால், தற்போது அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே உள்ள மக்களின் வேலை வாய்ப்பைக் கருதி தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அத்தகைய முந்திரிப் பருப்புத் தொழிற்சாலையை அமைக்க முன்வருவார்களேயானால், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, அந்தத் தாயுள்ளத்தின் அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, உரிய உதவியை அவர்களுக்குச் செய்ய முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே இருந்து 'ஆம்' என்ற பதில் கிடைக்கும் என்று எண்ணினேன். எனது பகுதியிலே இருக்கின்ற அந்த மசூகல்கள் எல்லாம் கன்னியாகுமரிக்குச் செல்வதை நான் அறிவேன். எனது பகுதியிலே எத்தனையோ பேர்கள் தொழில் துவங்குவதற்கு முன் வருகின்ற வேளையில் அப்படித் தொழில் துவங்க முன்வருபவர்களைக் கொண்டு அரசே இதனைச் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டிலே தொழிற்துறையில் பொற்காலம் படைக்க வேண்டும் என பொற்காலத்தைப் படைத்துக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் அத்தகைய தொழிற்

1993 மார்ச் 30]

சாலையைத் தொடங்குவதற்கு அரசு பல்வேறு சலுகைகளை அளித்து வருகின்ற தருணத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி நபர் மூலம் அத்தகைய தொழிற்சாலையைத் தொடங்க முன்வருவார்களேயானால் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தாயுள்ளம் கொண்ட அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்த தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்க உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

161—

பி.எஸ்.ஸி, (ஊரக வளர்ச்சி) பட்டப்படிப்பிற்கு அங்கீகாரம்.

**9017* திரு. க. வெ. வீ. இ ராசமாணிக்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகளில் தற்போது போதிக்கப்படும் பி.எஸ்ஸி. (ஊரக வளர்ச்சி பாடம்) பட்டப் படிப்பிற்கு அங்கீகாரம் வேண்டி அரசுக்கு மனுக்கள் வந்துள்ளதா?

(ஆ) அங்கிகாரம் வழங்கப்பட்டு விட்டதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

168—

தெப்பப்பட்டி அருகில் கட்டப்பட்டுள்ள அனாகவள்ளி ஓடைத் திட்டம்.

**9763*—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலக்கோட்டைத் தொகுதி, வத்தலகுண்டு பிர்கா தெப்பப்பட்டி அருகில் கட்டப்பட்டுள்ள அனாகவள்ளி ஓடைத் திட்டம் இன்னும் முடிவுபெறாமல் இருப்பதை அரசு அறியுமா?

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS